புதுமலர்: 08 —— புரட்டாதி - ஐப்பசி —— இதழ்: 05

# அனல்

இணை ஆசிரியர்கள்

- யோ.நிக்ஷன்
- வே.மகாராஜா

அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்
ஆவியிலே அனலாயிருங்கள்
கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்
- ரோமர் 12:11 -

சீயோன் தேவாலயப் பிரசுரம்

ZION CHURCH PUBLICATION

01.09.2011

# பொருளடக்கம்


* அனலின் குரல்
* கதையும் கற்றதும் : சிறந்தது எது?
* புயலில் புகலிடம்
* வாலிபர் வளாகம் : வயது 25
* வினா விடை : 47
* நல்ல நோக்கம்! தவறான வழி
* நற்செய்தி : பகைமை மறையட்டும்
* பக்தர்களின் பயிலகம்
* அருட்பணியாளர் சரிதை
* மூவரி முத்துக்கள்
* அனலின் ஆன்மீக விருந்து
* குறுக்கெழுத்துப்போட்டி : 45


## ஜெப வேண்டுதல்

வியாதியினாலும், வேதனையினாலும், குடும்ப பிரச்சினையினாலும் கலக்கமுற்று என்ன செய்வது என்று அறியாமல் திகைக்கும் தாயே, தந்தையே, சகோதரனே, சகோதரியே கலக்கம் வேண்டாம். உங்கள் பிரச்சினைகளையும் தேவைகளையும் எங்களுக்கு எழுதுங்கள். உங்களுக்காக ஜெபிப்போம்.

### எழுத வேண்டிய விலாசம்


சீயோன் ஜெபக்குழு,
347 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.

**Zion Prayer Group,**
**347, Navalar Road,**
**Jaffna, Srilanka.**

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

The Editor "Anal",
347, Navalar Road,
Jaffna, Srilanka.

*ஆசிரியர் "அனல்",*
*347 நாவலர் வீதி,*
*யாழ்ப்பாணம். இலங்கை.*

T.P.: 0094(0) 21-222 2707 e-mail: jazion@sltnet.lk


*திக்கற்றவர்களாய் போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி, நான் அவர்களை உயிரோடே காப்பாற்றுவேன், உன் விதவைகள் என்னை நம்புவார்களாக. எரேமியா 49:11*

# அனலின் குரல்

**இயேசு கிறிஸ்துவின் வல்லமையுள்ள நாமத்தினாலே வாழ்த்துக்கள்!**

மீண்டும் இச் சஞ்சிகையை உங்கள் கைகளில் கிடைப்பதையிட்டு மகிழ்ச்சி யடைகின்றோம்.

ஆசீர்வதித்து பாதுகாக்கும் ஆண்டவர் இயேசு உங்கள் வாழ்வில் அற்புதங்களைச் செய்து, உங்களை தம்பிள்ளைகளாக ஏற்றுக் கொள்வதற்கு ஆயத்தமாய் இருக்கின்றார். நீங்கள் அவரண்டை இன்னும் நெருங்கிச் சேரவேண்டும். மற்றவர்களையும் அவரண்டை கொண்டு வரவேண்டும்.

மத்தேயு 15ம் அதிகாரத்திலே இயேசு மலையின் மேல் ஏறி அமர்ந்து கொண்டார். அப்பொழுது கீழேயிருந்த சப்பாணிகள், ஊனர், முடவர் போன்றவர்களைக் கொண்டு வந்து இயேசுவின் பாதத்தில் வைத்தார்கள்.

**இங்கே கவனிக்கப்பட வேண்டியது, இயேசு இருந்த இடத்திற்கு அவர்களைக் கொண்டு போனதே!.** இது கடினமானது. களைப்பை ஏற்படுத்தக் கூடியது. ஆனால் அங்கே சென்ற போது விடுதலை கிடைத்தது. **இயேசுவை தாகத்தோடு, வாஞ்சையோடு தேடுங்கள். அவர் உங்களை ஆசீர்வதிப்பார்.**

– ஆசிரியர் –




# சிறந்தது எது?



ஒரு முறை ஒரு பல்கலைக்கழகத்திலே ஒன்றாக கல்வி பயின்ற நண்பர்கள் சிலர் தங்களது பேராசிரியர் ஒருவரை அநேக நாட்களுக்கு பின்பாக சந்திக்கும் படி சென்றனர். ***அங்கே அவர்கள் தமது பழைய நினைவுகளை மீட்டதோடு தமது தற்போதைய தொழில்கள், வேலைப்பளு, பரபரப்பான வாழ்க்கைமுறை என்பவற்றைப் பற்றி கதைத்துப் பேசினர். சிறிது நேரத்தில் அந்த பழைய மாணவர்களுடைய பேச்சுக்களில் அவர்களது வாழ்க்கையிலும் தொழில்களிலும் காணப்பட்ட மன அழுத்தம் மற்றும் மன உளைச்சல் குறித்த முறைப்பாடுகளே அதிகமாய் இருந்தன.*** அந்த பேராசிரியரும் இவர்களது கலந்துரையாடலை அமைதியாக கேட்டுக்கொண்டிருந்தார்.



வந்தவர்களை உபசரிக்கும் நோக்கோடு பேராசிரியர் உள்ளே சென்று ஒரு பாத்திரம் நிறைய தேநீர் தயாரித்து எடுத்து வந்தார். **அதனோடு கூட அவர்கள் அருந்தும் படியாக விதவிதமான குவளைகளையும் எடுத்து வந்தார். கண்ணாடி, பிளாஸ்டிக், பளிங்கு என்பவற்றைக் கொண்டு விதவிதமாக அவைகள் உருவாக்கப்பட்டிருந்தன. அவற்றில் சில மிகவும் விலையுயர்ந்தனவாகவும் சில சாதாரணமானவைகளாகவும் காணப்பட்டன.** பேராசிரியர் அவர்களை தேநீர் அருந்தும் படி கூறியபோது அவர்கள் ஒவ்வொருவரும் அங்கே வைக்கப்பட்டிருந்த குவளைகளில் ஒவ்வொன்றை தெரிந்தெடுத்து தேநீரைப் பரிமாறிக்கொண்டனர்.

அப்போது அந்த பேராசிரியர் அவர்களைப் பார்த்து ***"பார்த்தீர்களா? நீங்கள் அனைவரும் இங்கே வைக்கப்பட்டிருந்த குவளைகளில் விலையுயர்ந்தவைகளையும் அழகானவைகளையும் தெரிந்தெடுத்து சாதாரணமானவைகளையும் எளிமை***

*யானவைகளையும் முடியுமானவரை தள்ளி வைத்தீர்கள். இதுவே உங்கள் வாழ்க்கைகளில் ஏற்பட்டுள்ள இத்தனை மனஉளைச்சலுக்கும் காரணம். நினைவில் கொள்ளுங்கள் நீங்கள் தெரிந்தெடுத்த குவளை அந்த பானத்தின் தரத்தை உயர்த்தப்போவதில்லை. உங்களுக்கு தேவைப்படுவது தேநீர் மட்டுமே. குவளை அல்ல. இருந்தாலும் நீங்கள் திறமையான குவளைகளை தெரிந்தெடுக்க முனைந்ததோடு மற்றவர்களுக்கு கிடைத்த குவளைகளை அவதானிக்கவும் தவறவில்லை".*

**"இந்த தேநீரைப் போலத்தான் எமது வாழ்க்கையும். எமக்கு கிடைக்கும் பணம், பதவி, பெயர், புகழ் எல்லாமே எம் வாழ்க்கையை ஏந்திக் கொள்ளும் குவளைகள் போல. முக்கியமானது வாழ்க்கையே. சிலவேளைகளில் நாம் குவளையில் அதிக கவனத்தை செலுத்துவதால் தேவன் எமக்கு கிருபையாய் தந்த வாழ்க்கை எனும் தேநீரை ருசித்து அனுபவிக்க மறந்துவிடுகிறோம்" என்றார்.**

**எனவே நமக்கு கிடைப்பவற்றை சிறப்பானவைகளாக மாற்றுவதே மகிழ்ச்சியின் அடித்தளம்.**

எளிமையாக வாழ்வோம். உதாரத்துவமாய் அன்பு செய்வோம். இனிய சொற்களைப் பேசுவோம். மற்றவர்களை தாங்குவோம். தேவனையே சார்ந்து வாழ்வோம். அப்போது தேவன் மற்ற எல்லாவற்றையும் நேர்த்தியாகவும் சிறப்பாகவும் மாற்றுவார்.

**மாற்-8:36 மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன?**

கெ. இன்பரூபன்

## வினாவிடை - 46 சரியான விடை எழுதியவர்கள்

01. தி.கலைக்குமரன் - புன்னாலைக்கட்டுவன்
02. சி.பசுபதி - ஊர்காவற்றுறை
03. ஏச்.ஜோன்சன் - மானிப்பாய்
04. ஏச்.இவாஞ்சலின் - மானிப்பாய்
05. சி.பியூலா - மானிப்பாய்
06. க.பரிமளா - திருநகர்
07. ஜோ.ஜீபிகா - மானிப்பாய்
08. தி.ஜெகா - மயிலங்காடு
09. சி.சாமுவேல்ஜெமாதிஸ் - மானிப்பாய்
10. க.ஜெஜீவன் - ஊர்காவற்றுறை
11. ஏச்.விஜிதா - மானிப்பாய்
12. வி.நிதர்சனா - ஊர்காவற்றுறை
13. வி.நிதர்சன் - ஊர்காவற்றுறை
14. வி.கனியுகன் - ஊர்காவற்றுறை
15. வி.ஷர்மிளா - ஊர்காவற்றுறை




# புயலில் புகலிடம்

**த**ன்னை நம்பினவர்கள் வருத்தப்படுகின்றதை கண்டு மௌனமாக இருப்பவர் இல்லை நம்முடைய ஆண்டவர். அவர் அவர்கள் பக்கமாக வந்து மீட்டெடுக்கிறவர்.



தேவன் உங்கள் பக்கமாக வருவதையும் உங்களை அணைக்க ஆவலாய் இருப்பதனையும் கண்டு கொள்ள எப்பொழுதும் ஆயத்தமாய் இருங்கள். ஆவேசம் என்று சொல்லி ஒதுங்கி விடாதீர்கள். **"எந்த சூழ்நிலையிலும் எப்பேற்பட்ட நேரத்திலும் மனரம்மியமாய் இருக்க கற்றுக் கொண்டேன்"** என்று பவுல் கூறுகின்றார்.

உன் வாழ் நாட்களிலும் மனதிருப்தியும் போதும் என்கின்ற மனதுடன் கூடிய தேவபக்தியும் உன்னை இளைப்பாறவும் கிறிஸ்துவை பற்றவும் செய்வதாக. **இயேசு உன் மீது அக்கறையும் அன்பும் கொண்டுள்ளார்.** பயப்படாதே! திகையாதே! திடன் கொள்ளுங்கள்!! நான் தான்!!! என்று சீஷர்களை திடப்படுத்தினார்.



**ஒரு வேளை நீயும் அதைரியம், எதிர்பார்ப்பு நடக்கிவில்லையே, பரீட்சையில் தோல்வி, ஏமாற்றம், புறக்கணிப்பு போன்றவற்றால் சோர்வுற்று அமிழ்ந்து போகும் நிலையில் இருக்கலாம். கலங்காதே.**

**இயேசு கிறிஸ்து ஒரு போதும் கைவிடார்!!!**

ரேமா




**கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர சகோதரிகளுக்கு அன்பின் வாழ்த்துக்கள்!**




அன்பின் வாலிப உள்ளங்களுக்கு! இந்தக் காலம் எழுப்புதலையும் புதுப்பித்தலையும் வாஞ்சித்து கதறும் காலம், தேவனுடைய வழிமுறைகளும் அவருடைய வார்த்தையின் பெறுமதியையும் கண்டு உணர்ந்த ஒரு மனிதன் தேவனுக்கு கோபத்தை மூட்டும் செயல்களைச் செய்தான். இறுதியாக வாழ்வின் ஓட்டத்தில் தேவனுடனான தொடர்பில் துண்டிக்கப்பட்டவனாக மரணத்தைச் சந்திக்கின்றான்.

(தேவனுக்கு பிடிக்காத காரியங்கள் என்று தெரிந்தும், மறுபடியும் மறுபடியும் அவற்றை செய்கின்றான், தேவனின் பார்வைக்கு செம்மையானதை செய்யாமல், பாகால்களுக்கு வார்ப்பு விக்கிரகங்களைச் செய்து, புற ஜாதிகளின் அருவருப்புக்களின்படி நடந்து, தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாக மிகவும் துரோகம் பண்ணினான்) இவன் தான் ஆகாஸ்ராஜா. தான் நெருக்கப்படுகின்ற காலத்திலும் கர்த்தருக்கு விரோதமாக ஆகாஸ் துரோகம் பண்ணிக் கொண்டு இருந்தான்.

இந்தக் காரியங்கள் ஆகாஸும் முழு இஸ்ரவேலும் நாசமாகிறதற்கு ஏதுவாயிற்று.

தேவனுக்கும் அவருடைய கட்டளைகளுக்கும் விரோதமாக நடந்தவன். **தன் ராஜ்யம் அனைத்தையும் கேடாக்கி மோசம் போக்கிக் கொண்டிருந்த ஆகாஸூக்கு அருமையான ஒரு குமாரன் உண்டு அவன் தான் எசேக்கியா.**

**25ஆவது வயதில்** ராஜாவாகின்றான் ஒரு வாலிபன். தேவன் தெரிந்தெடுத்த பாத்திரம். இவன் காலத்தில் தேசம் எழுப்புதலையும், அமைதிக் காற்றையும் அதி முக்கியமாய் தேவ காரியங்களை சீர்படுத்தி புதுப்பித்தலை செய்யவும் எழுப்பப்பட்டது.

*இன்று பக்தி வைராக்கியமுள்ள எசேக்கியாக்கள் தேவை. பாகால்களுக்கு சாவுமணியடிக்கவும். விக்கிரக தோப்புகளுக்கு விடை கூறவும், பூட்டப்பட்டு பாளாக்கப்பட்ட தேவாலயங்களை பரிசுத்தப்படுத்தி சீர்படுத்தவும், அணைந்து போன தீபங்களை சுடர்விட செய்யவும், தகர்க்கப்பட்ட பலிபீடங்களை செப்பன் செய்து தேவனுக்கு ஏற்கும் சுகந்த சனையான பலிகளை செலுத்தவும், சபைக்கும், வனுக்கும், முதுகு காட்டினவர்கள் மனந்திரும்பவும், நவன் எசேக்கியாக்களை தேடுகின்றார்.*



ஆவலாய்! தாகமாய்! வாஞ்சையாய்! தேடுகின்றார். எழும்பு தம்பி, தங்கையரே தாமதம் செய்யாதே! அவரை நம்பி பற்றிக் கொள். இயேசுவுக்காய் செயலாற்று.

உனக்கு கிடைத்திருக்கும் தகுதி, கல்வி, வேலை, தாலந்துகள் யாவும் (பதவி நிலை) தேவ சித்தத்திற்கே பயன்படுவதாக. எசேக்கியா தன் பதவியை (ராஜ ஸ்தானத்தை) தேவனுக்காகவே அவருடைய ராஜ்யத்தின் மேன்மைக்கும், விஸ்தாரத்துக்குமாகவே பயன்படுத்தினான்.


## பதவிக்கு வந்த எசேக்கியா (25ஆவது வயதில்)

பரிசுத்தத்தில் அக்கறை கொண்டவனாக முழு தேசத்தையும் (ஒவ்வொரு தனி மனிதனும், விசேஷமாக தேவ பணியாளர்களும்) சுத்தமாக வேண்டிய அவசியத்தையும், அவசரத்தையும், தேவனின் விருப்பத்தையும் கூறி பரிசுத்தமாகுதலுக்கு நேராக நடத்துகின்றான்.

**❋ நீ எதிலே அதிக அக்கறை காட்டுகின்றாய்? பதில் சொல்.**

## உண்மையான எழுப்புதலுக்கான 04 படிகள்

### 01. குறிப்பிட்ட பாவ அறிக்கைக்கு ஏசேக்கியா அறைகூவல் விடுகின்றான்.



நான் பாவம் செய்தேன் என்று அறிக்கையிடாமல் கூடவே இந்த இந்த பாவம் செய்தேன் என்று பாவத்தை சொல்லி சொல்லி அறிக்கை செய்யுங்கள். தேவன் அதனை எதிர்பார்க்கின்றார். அப்படி நீ செய்வாயானால் பாவம் அற அசுத்தத்தை இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் கழுவப்பட்ட நிச்சயத்தை பெற்றுக் கொள்வாய்.

**என் மீறுதல்களை நான் அறிந்திருக்கின்றேன்: என் பாவம் எப்போதும் எனக்கு முன்பாக நிற்கின்றது. (சங்கீதம் 51:3)**

தேவனுடைய பரிசுத்தம் உன் வாழ்க்கையில் விளங்குவதற்கு: குறிப்பிட்ட பாவத்தை சொல்லி சொல்லி அறிக்கை செய்வதும், மெய்யான மனம் திரும்புதலும் அவசியம்.

**✱✱✱ பாவ மன்னிப்பின் நிச்சயம் உண்டா?**

### 02. கர்த்தரின் வீட்டை பரிசுத்தப்படுத்த வேண்டும்

புதிய உடன்படிக்கையின் இரத்தத்தால் சம்பாதிக்கப்பட்ட திருச்சபை கர்த்தரின் வீடு. அழுக்கானதும், தூசு படிந்ததும், அருவருக்கத்தக்க காரியங்கள் சபையில் காணப்படவும் செயற்படக்கூடாது. அசுத்தமானதை பரிசுத்த ஸ்தலத்தில் இருந்து வெளியேற்ற வேண்டும்.

உலகத்தின் நடைமுறைகளும், உலக சிந்தனைகளும், ஆத்துமாக்களை கவரும் தந்திரம், துர் உபதேசங்கள், உலக சினேகமும் வேண்டவே வேண்டாம்.

**✱✱✱ உலக சினேகம் உன்னில் உண்டா?**



## 03. உடன்படிக்கை/அர்ப்பணிப்பு

தேவனுடைய உக்கிர கோபம் நீங்கும்படிக்கு அர்ப்பணிப்பை ஆராய்ந்து பாருங்கள். உடன்படிக்கைகள் மீறப்பட்ட சந்தர்ப்பங்களை நினைவு கூர்ந்து மறுபடியும் புதுப்பித்துக் கொள்ளுங்கள். தேவனோடும், திருச்சபையோடும், ஒருவருக்கொருவர் செய்த உடன்படிக்கைகள் சீர்செய்யப்பட வேண்டும். தேவன் அர்ப்பணிப்பில் அக்கறையுள்ளவராய் இருக்கின்றார்.

*** உமது அர்ப்பணிப்பு எத்தகையது?

## 04. பாவமன்னிப்பு பற்றி நிச்சயமும் அறிவிப்பும்

எசேக்கியா பாவ நிவாரண பலியின் மேல் அக்கறையுள்ளவனாக வெள்ளாட்டுக்கடாக்களை சபையாருக்கு முன்பாக கொண்டு வந்தார்கள். அவைகள் மேல் அவர்கள் தங்கள் கைகளை வைத்தார்கள். அவைகளின் இரத்தத்தால் பாவத்துக்கான பிராயச்சித்தம் செய்தார்கள்.

**புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசு கிறிஸ்து (இதோ உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி – யோவான் 1:29) இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும் 1யோவான் 1:7**




இயேசுக் கிறிஸ்துவே பாவங்களை மன்னிக்க ஒரே வழி என்பதனை நீ அறிந்து கொள். அதனை மற்றவர்களுக்கு அறிவிக்க வேண்டும்.

**பாவம் அறியாத அவரை (இயேசுவை) நமக்காக பாவமாக்கினார். 1கொரிந்தியர் 5:21**

*** கிறிஸ்து தரும் இலவசமான பாவ மன்னிப்பை அறிவிப்பாயா?

என் அப்பா இயேசு ஏற்படுத்தியிருக்கின்ற வாசஸ்தலத்தில் ஜீவகிரீடம் வெறுமையாக இருக்கக் கூடாது. அந்த ஜீவ கிரீடத்தை நானும் நீயும் பெற்றுக் கொள்வதோடு மற்றவர்களும் இழந்து போகாதபடி நானும் நீயும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். இந்த பாருலகில் யாரும் கைவிடப்பட்டு போகாதபடி நானும் நீயும் இயேசுவுக்காய் எழுந்து நிற்க வேண்டும்.








## வினா விடை - 47



01. "இந்தக் காரியம் அவர்களுக்கு பாவமாயிற்று" யாருக்கு?
02. துன்மார்க்கமோ பாவியைக் கவிழ்த்துப் போடும் என வாசிப்பதெங்கே?
03. தலை குனிந்து கர்த்தரை பணிந்து கொண்டது யார்?
04. தங்கள் விரல்கள் உண்டு பண்ணினதையும் அணிந்து கொள்ளுகிறவர்கள் யார்?
05. கர்த்தர் பூமியிலே ஒரு புதுமையை சிருஷ்டிப்பார் என்று சொன்னது யார்?
06. கர்த்தருடைய புதிய வாசலில் உட்கார்ந்தவர்கள் யார்?
07. புதுச்சால்வையை போர்த்துக் கொண்டிருந்த தீர்க்கதரிசி யார்?
08. நூதன தேவர்களை தெரிந்து கொண்டவர்கள் யார்?
09. அவர்களுக்கு பெரிய விருந்து பண்ணி அவர்களை அனுப்பி விட்டவன் யார்?
10. "இந் நாள் வரைக்கும் இருக்கிற பெரிய கற்குவியலை அதின் மேல் குவித்தார்கள்" எதன் மேல்?

# நல்ல நோக்கம் தவறான வழி


## வேதப்பகுதி: நீதிமொழிகள் - 12:17-28

ரோகித்தின் தந்தை பீரோவில் வைத்திருந்த பணத்தில் நூறு ரூபாய் குறைந்தது. ரோகித் அதைத் திருடியிருந்தான். வேறு



வழியின்றி அதை ஒத்துக் கொண்டான். அவனுடைய தந்தை கோபத்தில் அவனை அடித்துவிட்டார். **தன்னுடன் பயிலும் சுந்தர் பள்ளிக்கூட பீஸ் கட்ட முடியாமல் அவனை வெளியே நிறுத்தியிருந்தார்கள். அவன் மேல் பரிதாபப்பட்டு அவனுக்கு உதவி செய்யவே ரோகித் தந்தைக்கு தெரியாமல் பணம் திருடியிருந்தது தெரிய வந்தது.**

***ரோகித்தின் நோக்கம் மிக மிக நல்லது. ஆனால் அதற்காக அவன் கடைப்பிடித்த வழி தவறானது.*** **ஒரு தவறான வழியில் போய், ஒரு நல்ல காரியத்தைச் செய்வது நல்லது அல்ல. சுந்தருக்கு உதவும்படி ரோகித் அப்பாவிடம் கேட்டிருக்க வேண்டும்.**



**நல்ல நோக்கம் இருப்பது மிகவும் பாராட்டிற்குரியது. அனால் அதனை கர்த்தருக்கு பிரியமான நல்ல வழியில் தான் நிறைவேற்ற பிரயாசப்படவேண்டும்.**

**சிந்தனைக்கு: நல்ல குறிக்கோள்களுடன் நல்ல வழிமுறைகளும் இணைந்தால் நல்ல விளைவுகள் ஏற்படும்.**







மனிதக்கூட்டத்தை நேசிக்கும் முரண்பாடற்ற சமுதாயம் என்பது பூமியில் இல்லை என்று சொல்லிக் கொள்ள முடியாது. நமக்கு விரோதமாக தவறிழைத்த ஒரு நபரை நாம் மன்னித்துவிடத் தவறும் போது அடுத்தபடியாக நாம் அந் நபரை இருதயத்தில் பகைக்க ஆரம்பிக்கின்றோம். அவ்விதம் நாம் அவரைப் பகைக்க துவங்கும் போது நமக்கு சம்பவிக்கிறதென்ன? **"தன் சகோதரனைப் பகைக்கிறவன் இருளிலே இருந்து இருளிலே நடக்கிறான், இருளானது அவன் கண்களை குருடாக்கினபடியால் தான் போகும் இடம் இன்னதென்று அறியாதிருக்கிறான்" (1யோவான் 2:11)** இவ் வேதப்பகுதி நம்மை அச்சுறுத்துவதாக இருப்பினும் இது மாறாத சத்தியமே.

நாம் யாரையாவது பகைத்தால் நாம் இருளில் நடக்கும் ஒரு குருடனைப் போலவே இருப்போம், நம்முடைய வாழ்க்கையானது நாம் சென்றடைய வேண்டிய ஒரு இடமோ அல்லது இலக்கோ அற்றதாக அர்த்தமற்றதாக குறிக்கோள் அற்றதாக யாதொரு நோக்கமில்லாத ஒரு வீணான வாழ்க்கையாவே இருக்கும். சுருங்கக்கூறின் நாம் யாரையாவது வெறுத்தால் நம்முடைய வாழ்வைக் குறித்த தேவ நோக்கம் ஒருக்காலும் நம்மில் நிறைவேற்றப் படாது. காரிருளில் நடக்கும் ஒரு குருடனைக் கற்பனை செய்து கொள்ளுங்கள். அவன் ஒரு போதும் தான் போய்ச்சேர வேண்டிய இடத்தை சென்றடையமாட்டான். ஒரு சுவரில் மோதியோ அல்லது ஒரு படுகுழியில் விழுந்தோ அவன் தன்னுடைய உயிருக்கே அபாயம் விளைவித்துக் கொள்ளக் கூடிய அதிகமான சாத்தியக்கூறுகளும் உள்ளன.



நாம் யாரையாவது பகைத்தால் ஆன்மீக ரீதியாக நாம் குருடரே மட்டுமல்ல இருளிலே நடக்கிறவர்களாகவே மாறிப்போய்விடுவோம். ஒரு குருடன் வெளிச்சமுள்ள இடத்தில் நடந்தாலாவது பார்வையுள்ள யாராகிலும் ஒருவர் அவனுக்கு வழிகாட்டி, சரியான இடத்திற்கு பாதையில் நடத்தலாம். ஆனால் இருளில் நடந்தால் ஒன்றும் செய்ய முடியாது.

அருமையான சிநேகிதரே, தேவனுடைய மேன்மையான திட்டத்தை நீங்கள் கண்டு உங்கள் வாழ்வை தேவனின் கரத்தில் மறைத்து வைக்க, நீங்கள் முயன்றால் அவருடைய அன்பினால் நீங்கள் நிரம்பமுடியும். அந்த அன்பு பகையை வெல்லும். அவரால் நீங்கள் வெல்லப்பட்டால் எதுவும் உங்களை வென்றுவிட முடியாது. நீங்களும் எதிலும் தோற்றுப்போக மாட்டீர்கள்.

மனிதர்களின் சந்தோஷம் தமது பாவத்திலிருந்து தாம் விடுதலையாவதிலேயே தங்கியுள்ளது. இந்த சந்தோஷத்தை அனுபவிக்க பகையை விட்டு விட்டு குருட்டுத்தனத்தையும் இருளையும் கிளித்துக் கொண்டு நீர் வெளியே வரும் போது ஏற்படும் மனப்பூர்வமான விடுதலை! அது பெறுமதியானது.

பகையை வெல்ல
பரிசுத்த இயேசுவின்
அன்பை பகிர்ந்து கொள்

பகையை வெறுத்து இயேசுவின் அன்பை நேசியுங்கள். அதுவே உங்களுக்கு ஆரோக்கியம்!.

## குறுக்கெழுத்துப் போட்டி - 44
## சரியான பதில் எழுதியவர்கள்

01. ஏஸ்.மார்கிரட் - மீசாலை
02. தி.ஜெகா - மயிலங்காடு
03. மா.ஜெயந்தி - மானிப்பாய்
04. மா.வைஷ்ணவி - மானிப்பாய்
05. ஏச்.விஜிதா - மானிப்பாய்
06. ஏச்.இவாஞ்சலின் - மானிப்பாய்
07. ஜோ.ஜீபிகா - மானிப்பாய்
08. ஓ.சுபாசினி டனி - நாவற்குழி
09. ஏஸ்.ஏஸ்தர்மேரி - நாவற்குழி
10. தி.கலைக்இன்பன் - புன்னாலைக்கட்டுவன்
11. ஏஸ்.யோகேஸ்வரி - மீசாலை
12. ச.சனோஜா - மீசாலை
13. சி.சிந்துஜா - மானிப்பாய்




## தீத்து தொடர்ச்சி......

**தீத்து**

02ம் அதிகாரம்

இந்த அதிகாரங்களில் ஓர் ஆரோக்கியமான சபைக்கு வேண்டிய அம்சங்களும் உள்ளூர் சபையின் வித்தியாசமான ஊழியங்களைப் பற்றியும் சொல்லப்படுகின்றது

## 01.முதிர்வயதுள்ள பரிசுத்தவான்கள்: தீத்து 2:1-4

இளவயதுள்ள தீத்து முதியோரைத் தவறாகப் புரிந்து கொள்ளவும் உதாசீனப்படுத்தவும் சந்தர்ப்பம் உண்டு. **ஒரு சபையில் இளைஞரும் இருக்க வேண்டும். முதியோரும் இருக்க வேண்டும்.** தேவ கிருபையானது இரு பிரிவினரையும் இணைக்கும் பாலமாக உள்ளது. **இதை நிறைவு செய்ய இரு பிரிவினருக்கும் தேவ வார்த்தையில் உள்ள தேவன் எதிர்பார்க்கும் தரம் உபதேசிக்கப்பட வேண்டும்.** இங்கு முதிர்வயதுள்ளோர் எப்படி ஜீவிக்கும்படி உபதேசிக்கப்பட வேண்டும் என பவுல் தீத்துவுக்கு கூறுகின்றான்.

1. ஜாக்கிரதையுள்ளவர்களாய் இருக்க வேண்டும்.
2. நல்லொழுக்கமுள்ளவர்களாய் இருக்க வேண்டும்.
3. தெளிந்த புத்தியுள்ளவர்களாய் இருக்க வேண்டும்.
4. விசுவாசத்தில் ஆரோக்கியம் உள்ளவர்களாய் இருக்க வேண்டும்.
5. அன்பில் ஆரோக்கியம் உள்ளவர்களாய் இருக்க வேண்டும்.
6. பொறுமையில் ஆரோக்கியம் உள்ளவர்களாய் இருக்க வேண்டும்.
7. பரிசுத்தத்திற்கேற்ற நடத்தை உள்ளவர்களாய் இருக்க வேண்டும்.
8. அவதூறு பண்ணாதவர்களாய் இருக்க வேண்டும்.
9. மதுபானத்திற்கு அடிமைப்படாதவர்களாய் இருக்க வேண்டும்.
10. முதிர்வயதுள்ள ஸ்திரிகள் பாலிய ஸ்திரிகளுக்கு போதிக்க வேண்டும்.

## 02. பாலிய பரிசுத்தவான்கள்: தீத்து 2:4–8

பாலிய ஸ்திரிகள் நடக்க வேண்டியவை முதலாவது சொல்லப்படுகின்றது. **இங்கே தேவவசனம் தூஷிக்கப்படாதபடி நடந்து கொள்ள வேண்டிய விதம் அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளது.**

1. **புருஷரிடத்தில் அன்புள்ளவர்களாய் இருக்க வேண்டும்.**
2. **பிள்ளைகளிடத்தில் அன்புள்ளவர்களாய் இருக்க வேண்டும்.**
3. **தெளிந்த புத்தியுள்ளவர்களாய் இருக்க வேண்டும்.**
4. **கற்புள்ளவர்களாய் இருக்க வேண்டும்.**
5. **வீட்டில் தரித்திருக்கிறவர்களாய் இருக்க வேண்டும்.**
6. **நல்லவர்களாய் இருக்க வேண்டும்.**
7. **தங்கள் புருஷர்களுக்கு கீழ்ப்படிகிறவர்களாய் இருக்க வேண்டும்.**

அடுத்து பாலிய புருஷர் தெளிந்த புத்தியுள்ளவர்களாய் இருக்க **வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.** இப் பகுதியில் தீத்து பாலிய புருஷருக்கு மாதிரியாக இருக்கும்படி கூறப்படுகின்றது.

**புத்தி கூறுதலும் மாதிரியுமாய் இருப்பது விசுவாசத்தில் மற்றோரைக் கட்டி எழுப்பும் கருவிகளாக பெலன் கொண்டிருக்க வேண்டும்.** இப்படி தீத்து இருக்க வேண்டியதற்கான காரணத்தையும் பவுல் கூறத்தவறவில்லை. **தீத்து 2:8 எதிரியானவன் உங்களைக்குறித்துப் பொல்லாங்கு சொல்லுகிறதற்கு ஒன்றுமில்லாமல் வெட்கப்படத்தக்கதாக, உபதேசத்திலே விகற்பமில்லாதவனும், நல்லொழுக்கமுள்ளவனும் குற்றம்பிடிக்கப்படாத ஆரோக்கியமான வசனத்தைப் பேசுகிறவனுமாயிருப்பாயாக.**

## 03. கிறிஸ்தவ அடிமைகள்: தீத்து 2:9–15

இங்கு பவுல் கிறிஸ்தவ அடிமைகள் தவிர்க்க வேண்டிய மூன்று பொதுவான பாவங்களைக் குறித்து கூறுகின்றான்.

### 01. கீழ்ப்படியாமை:

இவர்கள் தங்கள் எஜமான்களுக்குக் கீழ்ப்படிந்து அவர்களைப் பிரியப்படுத்த வேண்டும். **அது மேலதிகமாக ஒரு மைல் போவது.** இருதயத்தினால் கீழ்ப்படியாமலும் கீழ்ப்படிய முடியும். **முறுமுறுப்போடும் வேலை செய்ய முடியும்.** சில இரட்சிக்கப்படாத எஜமான்கள் யோசனை இன்றி தங்கள் வேலைக்காரரிடம் கூடிய வேலை வாங்குவார்கள்.

## 02. எதிர்த்துப் பேசுதல்

அடிமை ஒருவனால் எதாவதொன்று செய்ய முடியாமல் இருக்கும் போது அவன் எஜமான் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு அவனை உட்படுத்த முடியும். **இந்த சந்தர்ப்பத்தில் அடிமை வாதாட இடமுண்டு. வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் மற்றோருக்கு தன் எஜமானைக் குறித்து சொல்ல எதாவது இருக்கும்.** இது ஒரு கிறிஸ்தவ அடிமைக்கு உகந்த சாட்சியாக அமையாது.

## 03. இவர்கள் களவாடுதலை தவிர்க்க வேண்டும்.

இந்த பாவம் தான் ஒநேசிமு பிலேமோனுக்கு எதிராக புரிந்திருக்க வேண்டும். **பிலேமோன் 1:18 அவன் உமக்கு யாதொரு அநியாயஞ்செய்ததும், உம்மிடத்தில் கடன்பட்டதும் உண்டானால், அதை என் கணக்கிலே வைத்துக்கொள்ளும்.** **ஒரு அடிமை ஏதாவது ஒரு சிறு பொருள் எடுத்து விற்று, பின் அது தொலைந்து விட்டது அல்லது உடைந்து விட்டது என இலகுவாகச் சொல்ல முடியும்.** இன்று அடிமைகள் இல்லை. ஆனால் வேலையாட்கள் உண்டு. **ஆனால் இந்த தொழில்புரிவோர் எவ்வளவு களவாடுகிறார்கள்.**

பவுல் கிறிஸ்தவ அடிமைகள் திருடாமல் நல் உண்மையைக் காக்க வேண்டும் எனக் கூறுவதற்குத் தகுந்த காரணங்கள் உண்டு. **நாம் உண்மையாய் சேவை செய்யும் போது வேதத்தை அழகுபடுத்துகின்றோம்.** மாத்திரமல்ல கிறிஸ்தவ செய்தியை அவிசுவாசிகளுக்கு கவர்ச்சிகரமாக மாற்றுகின்றோம். **இங்கு பவுல் 09வது வசனத்தில் இரட்சகர் எனக் குறிப்பிடுவதையும் பின் அதன் அர்த்தத்தை விரிவுபடுத்துவதையும் காணலாம்.** எப்படி இந்த "இரட்சகர்" என்றதன் அர்த்தத்தைக் காண்பிக்கின்றான் என்றால் **கிறிஸ்து மூலமாக நாம் பெற்றுக் கொண்ட இரட்சிப்பில் என்ன அடங்கி இருக்கிறது என்பதனை விளக்குவதன் மூலம் ஆகும்.** இங்கு கிருபையைப் பற்றி அழுத்திச் சொல்லப்படுகின்றது. **பவுல் தேவ கிருபையானது புரியும் மூன்றுவித செய்கைகளை எடுத்து விளக்குகின்றான்.**

## 01. தேவ கிருபை நம்மை மீட்கிறது: தீத்து 2:11-14

ஜனங்களால் தங்களைத் தாங்களே இரட்சிக்க முடியாது. **தொலைந்து போன மனுக்குலத்திற்கு தேவகிருபை தான் இரட்சிப்பைக் கொண்டு வரவேண்டும்.** இரட்சிப்பு பாவிகளினால் கண்டு பிடிக்கப்பட்டதல்ல. **இது கிறிஸ்துவின் மரணத்தின் மூலமும் உயிர்ப்பின் மூலமும் உண்டானது.** யார் எல்லாம் பாவத்தின் அடிமைத்தனத்தில் இருந்தார்களோ அவர்களை மீட்கும்படி தன் குமாரனை கிருபையாக அனுப்பினார். **இந்த இரட்சிப்பு எல்லா** ஏன் இப்படிப்பட்டவர்களாக இருக்க வேண்டும்

**மனுஷருக்குமாகும். ஏற்றுக் கொள்பவன் பெற்றுக் கொள்வான்.**

இங்கு சர்வலோகத்திற்கான தேவை தென்படுகின்றது. ஆனால் தேவன் உண்டுபண்ணிய பரிகாரமும் சர்வலோகத்திற்குமேயாகும். **மீட்பு எனும் போது "விலையை செலுத்துவதன் மூலம் விடுதலை ஆக்குவது" என்பதே பொருள்.**

## 02. தேவ கிருபை சீர்படுத்தும்: தீத்து 2:12–14

இரட்சிப்பு நிலை மாற்றத்தை மாத்திரம் உண்டுபண்ணுவதில்லை. **அது நம் மனப்பாங்கில், ஆசைகளில், குறிக்கோள்களில், செயற்பாடுகளிலும் மாற்றத்தை உண்டு பண்ணுகின்றது.** இந்தக் கிருபையானது நம்மை இரட்சித்து தேவ பக்தியுள்ளவர்களாக நம்மை மாற்றுகின்றது. **தேவ பக்தியுள்ளவர்களாக நாம் மாறும் போது தேவன் விரும்புவதை மாத்திரம் நாம் செய்து அதன் மூலம் தேவனை மகிமைப்படுத்துவோம்.**

## 03. கிருபை பலன் அளிக்கிறது: தீத்து 2:13

நாம் கிறிஸ்துவின் வருகையை எதிர்பார்க்கிறோம். இது நம் நம்பிக்கை. **இது நம் ஆனந்த பாக்கியம்.** இப் பகுதியில் இதைக் குறித்து வேறு விளக்கத்தை பவுல் தரவில்லை.

# 04. கிறிஸ்தவ பிரஜைகள்: தீத்து 3:1–8

ரோம சாம்ராஜ்யத்தில் கிறிஸ்தவர்கள் சந்தேகத்தோடேயே பார்க்கப்பட்டார்கள். **ஏனெனில் அவர்களது நடத்தை வித்தியாசமானதாக இருந்தது.** கிறிஸ்தவன் நல்ல பிரஜையாக விசுவாசத்தையும், திவ்விய சத்தியங்களையும் விட்டுவிடாதவனாக இருக்க வேண்டும். **எப்படிப்பட்ட குணாதிசயம் ஓர் நல்ல கிறிஸ்தவ பிரஜையிடம் காணப்பட வேண்டும் எனக் கூறவும் பவுல் தவறவில்லை.**

1. **துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களும் கீழ்ப்படிந்து அடங்கியிருத்தல்.**
2. **சகலவிதமான நற்கிரியைகளையும் செய்ய ஆயத்தமாயிருத்தல்**
3. **தூஷிக்கக்கூடாது**
4. **சண்டை பண்ணக்கூடாது**
5. **பொறுமையுள்ளவர்களாய் இருக்க வேண்டும்.**
6. **சந்த குணத்தைக் காண்பிக்க வேண்டும்.**

என்பதற்கான விளக்கத்தையும் பவுல் தருகின்றார். **இத் தருணத்தில் தம் முன்னைய வாழ்க்கையின் தரத்தை எடுத்துக்காட்டுகின்றான். அது எப்படிப்பட்டதெனப் பார்ப்போம்.**

1. புத்தியீனன்
2. கீழ்ப்படியாதவர்கள்
3. வழிதப்பி நடக்கிறவர்கள்
4. பலவித இச்சைகளுக்கும் இன்பங்களுக்கும் அடிமைப்பட்டவர்கள்
5. துர்க்குணத்தோடும் பொறாமையோடும் ஜீவனம் பண்ணியவர்கள்
6. பகைக்கப்படத்தக்கவர்கள்
7. ஒருவரை ஒருவர் பகைக்கிறவர்கள்

இப்படியெல்லாம் கூறி இதையும் இரட்சிப்போடு இணைக்கின்றான். **முதல் எப்படி இரட்சிப்போடு கிருபையை இணைத்தாரோ இப்போ அதோடு சம்பந்தப்பட்ட வேறு காரியங்களையும் காண்கின்றான்.** அவைகள் தயை, அன்பு, இரக்கம். தீத்து 3:4-5 **இது உண்டுபண்ணும் விளைவு என்ன? நம்பிக்கை, சுதந்தரர். தீத்து 3:6**

## 05. பிரச்சினையான மக்கள்: தீத்து 3:9-11

எங்களது சபைகளில் பிரச்சனைக்குரிய மக்கள் இருக்கக்கூடாது என நாம் விரும்புவோம். **ஆனால் மக்கள் எங்கே இருக்கிறார்களோ அங்கே பிரச்சினைகள் இருந்தே ஆகும்.** இங்கு பவுல் விசுவாசத்தின் அப்பிரஜோயனமான காரியங்களைக் குறித்து தர்க்கிப்போரை விட்டு விலகும்படி கூறுகின்றான்.

**முடிவாக பவுல் தனிப்பட்ட சில காரியங்களைக் கூறி, இந் நிருபத்தின் கருப்பொருளை அழுத்திச் சொல்லி தீத்து 3:14 நம்முடையவர்களும் கனியற்றவர்களாயிராதபடி குறைவுகளை நீக்குகிறதற்கேதுவாக நற்கிரியைகளைச் செய்யப்பழகட்டும். என்கின்றார்.**

**(கர்த்தருடைய மகிமையில் பிரவேசித்த போதகர் எம்.எம்.இன்பரூபன்)**

**ஜெஸி றூத்.**



# அருட்பணியாளர் சரிதை
## ரொச்சுங்கா புடய்ட்டே


அநேகரால் நன்மதிப்பு பெற்றவரும், செல்வாக்கு மிக்க வருமான ரொச்சுங்கா புடய்ட்டே என்ற மூன்றாம் உலக பிரபல மிஷனரி, வேதாகம மொழிபெயர்ப்புகளிலும், அவற்றை விநியோகிப்பதிலும் ஆற்றிய சேவையானது அளப்பரியதாகும். **தனது சொந்த இனமான ஹமார் இனத்தின் மீதும், உலக சுவிசேஷத்தின் மீதும் அவர் கொண்ட அக்கறையானது, அவரை இந்தியாவின் வடக்கு கிழக்கு பகுதியில் நெடுந்தொலைவில் அமைந்துள்ள அடர்ந்த காட்டுப்பகுதி சார்ந்த ஒரு கிராமத்திலிருந்து, அவருடைய மிஷன் பணிக்கும், உலகிற்கான வேதாகமத்திற்கும் தலை நகரமாகிய வீட்டன், இலினஸ் வரையான ஒரு கடினமானதும், அதைரியப்படுத்துகின்றதுமான ஒரு பாதைக்கு வழி நடத்தியது.**



ரோ புடய்ட்டே, மணிப்பூரில் அமைந்துள்ள சென்வோன் எனும் ஒரு இந்திய கிராமத்தல் பிறந்தார். அது பர்மிய எல்லையிலிருந்து அதிக தூரத்தில் இருக்கவில்லை. இந்த இடமானது புது டெல்லி அரசாங்கத்திற்கு அதிக தொலைவில் இருப்பதுடன் அது உத்தியோக பூர்வ கணக்குப் பட்டியலில் இடம் பெறவில்லை. மற்றும் **ரோ ஒரு வாலிபனாக இதை நேருவின் கவனத்திற்கு கொண்டு வரும் வரை அங்கே அரசாங்க பாடசாலைகளோ, அஞ்சல் அலுவலகங்களோ இருக்கவில்லை.** 1932ஆம் ஆண்டிலே ரோவின் தாயார் நோயுற்றிருந் தார். தேவன் அவருடைய தகப்பனை அழைத்தார், அவருடைய நண்பர்களும் உறவினர்களும் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர். ஆனாலும் அவர் தந்தையோ தடுமாறவில்லை. நிலைநாட்டப்பட்ட ஒரு கிராம சபை ஒன்றின் போதகர் என்ற பாதுகாப்பை விட்டுவிடுவது இலகுவாக இல்லாத போதும் அவர் போவதற்கான

கட்டாயத்தை உணர்ந்தார். **இவர் போவதற்கு மறுத்தால் வேறு யார் புல்புய்இற்கு சுவிசேஷத்தைக் கொண்டு வருவார்? கல்வியறிவில் குறைவுள்ளவராய் இருந்தாலும், ச்சாவுங்கா ஆற்றல் வாய்ந்த ஒரு பேச்சாளரும் சுவிசேஷ பணிக்கு மிகவும் பொருத்தமானவரும் ஆவார்.** ஒரு சில மாதங்களிலே ஓரளவு பெரிய சபையை கொண்டிருந்ததுடன் சுற்றுப்புற கிராமங்களுக்கு பயணம் செய்ய ஆரம்பித்து, அவர் போகும் இடமெங்கும் ஒரு சிறிய வேதாகம செய்தியை பகிர்ந்து கொள்வார்.

**ச்சாவுங்கா தனது பதினைந்தாவது வயதில் வேல்ஸ் தேசத்து மிஷனெரியான வட்கின் றொபர்ட் என்பவருடைய பணியினால் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டார்.** சென்வோன் தேசத்தில் அம்மிஷனெரியினுடைய பணியானது, அரசாங்க அதிகாரிகள் அவரை அவ்விடத்தைவிட்டு வெளியேற கூறியதினிமித்தமாக இடைநிறுத்தப்பட்டது. இது இளம் ச்சாவுங்காவிற்கு மிகப்பெரிய ஏமாற்றமாயிருந்தது. ஆனாலும் அவர் இதற்கு உடனடியாக ஒரு தீர்வைக் கண்டடைந்தார். மிஷனெரி தன்னிடத்தில் வரவுதற்கு இயலாதிருப்பின், ச்சாவுங்கா மிஷனெரியிடம் செல்வார். **அவர் ஹமார் இன எல்லைக்கு மிகவும் தொலைவில் அமைந்துள்ளதும், தனது நண்பர்களுடனும், ஆவிக்குரிய தகப்பனுடனும் வாசிப்பதற்கும், வேதாகமத்தை படிப்பதற்கும் கற்றுக் கொண்ட இடத்திற்கு செல்வதற்காக நூறு மைல் தூரம் பிரயாணம் செய்தார்.** பின்னர் அவர் திரும்பிச் சென்று தனது மிகுதியான வாழ்நாளை தனது சொந்த மக்களை இயேசுவை ஏற்றுக்கொள்ளச் செய்வதற்காக செலவிட்டார். ஐம்பது வருடங்களுக்கு முன்னே 80வீத ஹமார் இனத்தவர்கள் பகிரங்கமான கிறிஸ்தவர்களாக நான்காயிரம் மைல் சதுர கிலோ மீட்டருக்கு பரவி காணப்பட்டனர். ச்சாவுங்காவினதும் ஏனைய சுதேச சுவிசேஷகர்களுடையதும், போதகர்களுடையதுமான அர்ப்பணிக்கு நன்றிகள்.



ரோவுக்கு பத்து வயதாக இருக்கும் போது அவரின் தந்தை அவரை தனியாக அழைத்துச் சென்று, ஒரு 'மார் கிறிஸ்தவன் ஒருவன் மேலதிக கல்வியை பெறுவதன் பாரிய தேவையை குறித்தும், அப்போது தான் அவன் தனது சொந்த மக்களின் மொழியில் வேதாகமத்தை மொழிபெயர்க்க முடியும் எனவும் அன்பாக எடுத்துக்கூறினார். தந்தையின் உள்ளத்தில் ரோ தான் உள்ளார் என்பதனை புரிந்து கொள்வதற்கு


ரோவுக்கு நீண்ட காலம் எடுக்கவில்லை. இது மிக நீண்ட காலத்துக்கு பாடசாலைக்கு செல்வதற்காக வெகு தொலைவில் ஒரு பழக்கமற்ற சூழலில் வாழ்வதைக் குறிக்கும். அவர் முதலில் பயந்தாலும் பின்பதாக இத்தகைய ஒரு வாய்ப்பு 'மார் இனத்தை சேர்ந்த ஒரு வாலிபனுக்கு கிடைப்பது மிகவும் அரிது என்பதனை புரிந்து கொண்டார்.

**காடுகளுக்கூடான 96 மைல் தூர பிரயாணமானது முடிவற்றதாக காணப்பட்டது. ஆனாலும் இறுதியாக பல நாள் கடின பயணத்தின் பின்னர், ரோவும் அவரின் தந்தையும் சுராசம்பூரிலுள்ள மிஷன் பாடசாலையை அடைந்தனர்.** அப் பாடசாலையானது தங்குவதற்கும், உணவு பெறுவதற்கும் வசதிகள் கொண்ட ஒரு பாடசாலையாகும். மாணவர்களுள் பலர் விடுதியிலேயே தங்கியிருந்தனர். ரோவின் எளிய குடும்பத்திற்கு இத்தகைய சலுகைகள் அப்பாற்றபட்டவைகளாயிருந்தது. ரோவுக்கு மிஷன் பாடசாலைக்கு செல்கின்ற பாக்கியமானது, அங்கே தங்கி படிப்பதற்கான செலவுகளுக்காக ஒவ்வொரு நாளும் காலையும், மாலையும் 35 பசுக்களிலிருந்து பால் கறப்பதும், தோட்டத்தில் களைகளை அகற்றுவதும், வீட்டு வேலைகளில் உதவுவதுமாகும். இதனால் மற்றைய மாணவர்களுடன் சேர்ந்து காற்பந்தாடி மகிழ்ச்சியாயிருப்பதற்கோ, படிப்பதற்கோ அவருக்கு போதியளவு நேரம் இருக்கவில்லை. வேறு தேசங்களை சேர்ந்த ஆசிரியர்கள் தங்களின் சொந்த மொழியில் கற்பித்தலினால் அவர் ஒவ்வொரு நாளும் வகுப்பிலே அதிக கஷ்டப்பட்டார். முதல் தவணையை தன்னால் முடியுமா என்று கூட சந்தேகப்பட்டார்.

தடைகள் இருந்த போதிலும், ரோ விரைவாக தலைமைத்துவ குணாதிசயங்களை வெளிக்காட்டினார். அவர் கனிஷ்ட கிறிஸ்தவ முயற்சிக்கு தலைவராக தெரிவு செய்யப்பட்டார். இதனை அதிக ஆர்வத்துடன் ரோ எற்றுக்கொண்டார். அவருடைய வயதுக்கு மிஞ்சிய

தொடரும்....

(இவ் வாழ்க்கைச் சரிதை, ரூத்.ஏ.டகர் எழுதிய "எருசலேமிலிருந்து இரியன் ஜாயாவுக்கு" எனும் நூலிலிருந்து பெறப்பட்டு மொழிபெயர்க்கப்பட்டது)



# மூவரி

## முத்துக்கள்

பாவத்தை விட்டு
வெளியே இழுப்பது
தேவ நீதி

ஓய்வில்லாத
வெப்பம் கருந் "தீ"
நரகம்

சுகபோகத்தின் நிகர
விலை
நரகம்

அடுக்கி வைத்து
அழகு பார்ப்பது
மூடத்தனம்

இன்றைய திகதியின்
நாளைய ஆரம்பம்
தேவ கிருபை

நேரம் இன்னும்
இருக்கிறது என்பது
சுத்தப் பொய்

நாளையை நீ
மறந்தால் இன்றைக்கு
வெற்றி வீரனாவாய்

பாவத்துக்குப் பயந்து
ஓடுவதே
வீரனின் அழகு

கிறிஸ்துவைப் போல்
மாறுதல் என்பது
ஒப்பாயிருத்தல்

சோம்பலாய் இருக்க
அனுமதியாதது
தேவ கிருபை




**எ**ன் பிரியமான தேவ பிள்ளைகளே, சின்னஞ்சிறு வயதிலே உன்னைத் தெரிந்து கொண்ட தேவன் தூரம் பேனாலும் உன்னைக் கைவிடமாட்டார். உன் அவர் வைத்திருக்கின்ற திட்டம் பெரிது. **எரேமியா 33:3 என்னை நோக்கிக் கூப்பிடு, அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து, நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன்.** நீங்கள் சொல்லலாம், நான் ஆண்டவரைத் தான் விசுவாசிக்கின்றேன், ஆண்டவரைத் தான் நான் நாடி வந்திருக்கின்றேன். ஏன் என்னுடைய வாழ்க்கையிலே என்னுடைய ஜெபத்திற்கு பதில் இல்லை என்று தவிக்கலாம். நாம் நம்முடைய வாழ்க்கையிலே சில காரியங்களை அறிந்து கொள்ள வேண்டியதாய் இருக்கின்றது.

**நாம் நம்முடைய ஜெபத்தில் சில மாற்றங்களைச் செய்ய வேண்டியதாய் இருக்கின்றது. நாம் ஒவ்வொரு நாளிலும் காலையில் எழுந்து தேசத்திற்காக ஜெபிப்போம், சபைக்காக ஜெபிப்போம், இன்னும் அனேக காரியங்களுக்காக ஜெபிப்போம். இதனை நாம் அனேக காலங்களாக தொடர்ந்து செய்து வருவோம். இது எங்களுக்கு காலப்போக்கில் சோர்வை உண்டுபண்ணும்.** ஏன் என் வாழ்க்கையில் எரேமியா 33:3ல் சொல்லப்பட்ட வார்த்தை நிறைவேற வில்லை என்று நீங்கள் சிந்திக்கலாம். ஆனால இந்த வார்த்தையின் மூலம் ஆண்டவர் உங்களோடு பேசுவார். **"என்னை நோக்கிக் கூப்பிடு"** என்று தேவன் சொன்னார். அப்பொழுது **"நான் உனக்கு உத்தரவு கொடுத்து நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன்".** இந்த வார்த்தை உங்கள் இருதயத்திற்கு சந்தோஷத்தைக் கொடுத்தாலும் ஒரு பகுதியில் சோர்விருக்கும் இந்த

வார்த்தை என்னுடைய வாழ்க்கை யில் நிறை வேறாமல் இருக்கின்றதே. ஏன் என்னுடைய கூப்பிடுதலுக்கு இன்னும பதில் கிடைக்கவில்லை.

**அப்படியானால் எவ்வாறு கூபபிடும் போது எனக்கு பதில் கிடைக்கும் என்று சொல்லி நீங்கள் நினைத்த காரியங்களை உங்களுடைய உள்ளத்தில் வைத்துக் கொள்ளுங்கள். அது உங்களுடைய எதிர்காலத்தை குறித்ததாக இருக்கலாம், அது உங்க ளுடைய வியாதியைக் குறித்ததாக இருக்காலம். நீங்கள் எப்படிப்பட்ட தேவைகளோடு இருந்தாலும் அவை களை உங்கள் இருதயத்திலே நினைத்துக் கொள்ளுங்கள். நான் வேதாகமத்தி லுள்ள ஒரு சம்பவத்தை வைத்து இந்த வார்த்தையோடு கூட ஒப்பிட்டு பேசவிரும்புகின்றேன். "நாங்கள் எப்படி, எவ்வாறு கூப்பிட வேண்டும்"** என்ற தலைப்பிலே ஆராய்ந்து பார்ப்போம்.

நீங்கள் கேட்கலாம், அப்படி யானால் நாங்கள் இவ்வளவு கால மும் கூப்பிடவில்லையா? உண்மை யாக நீங்கள் கூப்பிட்டிருக்கலாம். ஆனால் தேவன் பல விதமாய் உங்க ளிடத்தில் எதிர்பார்க்கின்றார். ஒரு மனிதனின் கூப்பிடுதலின் சத்தத்திற்கு தேவன் செவி கொடுத்து அவருடைய வாழ்க்கையில் அற்புதத்தை செய்த தனை பரிசுத்த வேதாகமத்தில் புதிய ஏற்பாட்டில் பார்க்கின்றோம். அதே அற்புதத்தை எங்கள் வாழ்க்கையிலும் செய்வதற்கு தேவன் ஆயத்தமுள் ளவராய் இருக்கின்றார்.

**மாற்கு 10:46-52 (46.) பின்பு அவர்கள் எரிகோவுக்கு வந்தார்கள். அவரும் அவருடைய சீஷர்களும் திரளான ஜனங்களும் எரிகோவை விட்டுப் புறப்படுகிற போது, திமேயுவின் மகனாகிய பர்திமேயு என்கிற ஒரு குருடன், வழியருகே உட்கார்ந்து, பிச்சை கேட்டுக்கொண்டிருந்தான். 47. அவன் நசரேயனாகிய இயேசு வருகிறாரென்று கேள்விப்பட்டு: இயேசுவே, தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும் என்று கூப்பிடத் தொடங்கினான். 48. அவன் பேசா திருக்கும்படி அநேகர் அவனை அதட்டினார்கள். அவனோ: தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும் என்று, முன்னிலும் அதிகமாய்க் கூப்பிட்டான். 49. இயேசு நின்று, அவனை அழைத்து வரச் சொன்னார். அவர்கள் அந்தக் குருடனை அழைத்து: திடன்கொள், எழுந்திரு, உன்னை அழைக்கிறார் என்றார்கள். 50. உடனே அவன் தன் மேல் வஸ்திரத்தை எறிந்துவிட்டு, எழுந்து, இயேசுவினிடத்தில் வந்தான். 51. இயேசு அவனை நோக்கி: நான் உனக்கு என்ன செய்யவேண்டும் என்றிருக்கிறாய் என்றார். அதற்கு அந்த குருடன்: ஆண்டவரே, நான் பார்வையடையவேண்டும் என்றான். 52. இயேசு அவனை நோக்கி: நீ போகலாம், உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றார். உடனே அவன் பார்வையடைந்து, வழியிலே இயேசு வுக்குப் பின்சென்றான்.**

இந்தச் சம்பவம் நம் அனை வருக்கும் தெரிந்திருக்கும். இந்த சம்பவத்தின் மூலமாய் நான் உங்க

ளுக்கு மூன்று கூப்பிடுதலையும், இன்னொரு பகுதியில் கர்த்தர் எங்களை எப்படி கூப்பிடச் சொல்கின்றார் என்பதனையும் குறித்து ஆராய்ந்து காண்பிக்கப் போகின்றேன்.

## 01. விசுவாசத்தோடு கூப்பிட்டான்.

இன்றைக்கு நிச்சயம் தேவன் உங்களுடைய எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவார். **மாற்கு 10:47[A] அவன் நசரேயனாகிய இயேசு வருகிறாரென்று கேள்விப்பட்டு: ஜெப வாழ்க்கை என்றால் என்ன? தகப்பனோடு பேசுதல்: கடவுளிடம் அடிமைகளாகிய நாங்கள் பிச்சை கேட்பது என்றும் நாங்கள் நினைக்கின்றோம்.** உதாரணமாக, பரமண்டல ஜெபத்தை இயேசு எடுத்துக் காட்டினார். ஆனால் நான் ஒன்றைச் சொல்கின்றேன்: **நீங்கள் ஜெபிப்பதற்கு முன்பதாகவே தேவன் உங்களுக்கும், எனக்கும் என்னத்தைக் கொடுக்க வேண்டும் என்று அறிந்திருக்கின்றார்.** ஆனால் நாம் ஜெபிக்க தேவன் கூறுவதற்கு காரணம் என்னவென்றால், ***நாம் அவரோடு கூட வைத்திருக்கின்ற உறவை விட்டு வெளியே வரக்கூடாது. அவருடைய அடைக்கலத்துக்குள்ளே அடங்கியிருக்க வேண்டும். அவரோடு கூடியிருக்க வேண்டும் என்று சொல்லி அந்த ஜெப வாழ்க்கையை கர்த்தர் அனுதினமும் எங்களுடைய வாழ்க்கையிலே விரும்புகின்றார்.***

**மாற்கு 10:47[B] இயேசுவே, தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும் என்று கூப்பிடத் தொடங்கினான்.** இயேசு வருகின்ற பகுதியிலே உட்கார்ந்து இருந்த அந்தக் குருடன் இவ்விதமாய் கூப்பிடுகின்றான். சீஷர்களுடைய, ஜனங்களுடைய கால்நடமாட்டமும் சத்தமும் கேட்கின்றது. ஐயோ இந்தப் பகுதியிலே யாரோ போகின்றார்கள் என்ற உணர்வு அவனுக்குள்ளே வருகின்றது. அவன் ஒருநபரைப் பிடித்து யார் வந்திருக்கிறார்? என்று கேட்கின்ற போது அவன் கூறுகின்றான்: இயேசு வருகின்றார் என்பதாக. ஆனால் அவன் அதே ஊரில் வசிக்கின்றமையால் இதற்கு முன்பதாக இயேசு கிறிஸ்துவின் மகத்துவமான அற்புதங்களைக் குறித்து கேள்விப்பட்டிருப்பான். இயேசு கிறிஸ்துவை நன்கு அறிந்திருப்பான். **இயேசு வந்திருக்கின்றார் என்று கேள்விப்பட்டவுடனே முதலாவது அவனுக்குள் ஒரு விசுவாசம் தோன்றியது.** இந்த விசுவாசத்தின் மூலமாய் அவன் எப்படிக் கூப்பிடுகின்றான் என்றால்: விசுவாசத்தோடு கூப்பிட்டான.

ஒரு நம்பிகையும் அற்றவனாக இருந்த அந்த பர்த்திமேயு என்கின்ற குருடன் இயேசு கிறிஸ்துவை பார்த்து இவ்விதமாக கூப்பிடுகின்றான். அவன் அவிசுவாசம் கொள்ளவில்லை. நான் நினைக்கின்றேன்: பர்த்திமேயு வயது சென்றவராகவே இருந்திருப்பான். அவன் நினைத்திருக்காலம், இந்த வயது சென்ற காலத்திலே நான் பார்வையடைந்து என்னத்தை சாதிக்கப் போகின்றேன்? நான் இப்படியே

மரித்துப் போகலாம், இவ்விதமாக எம்மிலும் அனேகர் சொல்வதுண்டு. இருந்து நான் என்னத்தை சாதிக்கப் போகின்றேன்? ஏன் இந்தப் பெற்றோருக்கு பிள்ளையாக பிறந்தேன்? ஆனால் ஒன்றை மாத்திரம் அறிந்து கொள்ளுங்கள்: **பர்த்திமேயுவுக்கு அவனுடைய வயது பெரிதாய் தெரியவில்லை. அவனுடைய வாழ்க்கையில் இருந்த குறைவு அவனுக்கு பெரிதாய் தெரியவில்லை.**

இன்றைக்கு நாங்கள் எங்களுடைய குறைவுகளை மாத்திரம் பெரிதாய் பார்க்கின்றோம். சில பிரச்சைக்காரருக்கு அங்கவீனமான ஏதாவது ஒரு குறை இருக்கின்ற போது அதையே வைத்து சம்பாதிக்க நினைப்பார்கள். **இப்படித்தான் எங்களுடைய வாழ்க்கையிலும் ஒரு குறையை வைத்துக் கொண்டு எங்கள் வாழ்க்கையைக் குறித்து நாம் எப்படி வாழப்போகின்றோம் என்று சொல்லி ஊரெல்லாம் கூறித்திரிவோம்.** ஆனால் அந்த பர்த்திமேயு அறிந்திருந்தான்: எனக்கு குறையிருந்தாலும் சரி என் கூப்பிடுதலின் சத்தத்திற்கு செவி சாய்ப்பார் என்று சொல்லி அவருடைய செவி என்னுடைய கூப்பிடுதலுக்கு சாய்க்கப்பட்டிருக்கின்றது. அவனுக்குள்ளே முதலாவது தோன்றியது விசுவாசம்.

**விசுவாசமுள்ளவர்களைத் தான் நாங்கள் விசுவாசிகள் என்கின்றோம். இன்றைக்கு நம்முடைய விசுவாசம் எங்கே?** கடுகளவு விசுவாசம் இருந்தால் பெரிய மலையைப்



பார்த்து சமுத்திரத்திலே விழு என்று சொல்கின்ற போது அது விழும். இவ்விதமாக நாங்கள் உலகத்திற்கெல்லாம் உபதேசம் செய்கின்றோம். ஆனால் எங்களுடைய வாழக்கையிலே அது இல்லை. கடுகளவு விசுவாசம் கூட இல்லை. **இன்றைக்கு ஆண்டவர் நாங்கள் விசுவாசமுள்ளவர்களாய் வாழவேண்டும் என்றே விரும்புகின்றார். சின்ன ஒரு வியாதி என்றவுடனேயே வைத்தியரிடம் செல்வது. இன்றைக்கு நாம் எம்மை அறியாமலேயே அவிசுவாசத்தின் பகுதியிலே கால் எடுத்து நடக்கின்றோம். விசுவாசம் என்பது நம்முடைய வாழ்க்கையில் என்றும் உண்மையாய் காணப்பட வேண்டும்.** நாங்கள் ஒவ்வொருவரும் ஒன்றை நன்றாக புரிந்து கொள்ள வேண்டும். நீங்கள் முழுநேர ஊழியர்களாக இருக்கலாம், விசுவாசிகளாக இருக்கலாம், வேதாகம பாடாசலையில் கற்பவர்களாக இருக்கலாம். தேவ ராஜ்யத்தின் பணிக்காக கடந்து சென்று தேசத்தை இயேசு கிறிஸ்துவுக்கு சொந்தமாக்குகின்ற இந்த நாட்களிலே நான் ஒன்றை உங்களுக்கு சொல்கின்றேன். **நாங்கள் ஒரு போதும் பிழைப்புக்காக தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் அல்ல. அழைப்பின் நிமித்தமாய் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள். கர்த்தர் நிச்சயம் நம்மை முடிவு பரியந்தம் நடத்துவார்.**

**உங்கள் மேல் இருக்கின்ற அந்த அபிஷேகத்தின் வல்லமை பெரிது. பயப்படுதல் உங்களுக்குள்ளே ஒரு பொழுதும் வரக் கூடாது. விசுவாசத்தைத்** அந்த

**தொடக்குகிறவரும், முடிக்கிறவருமாகிய கிறிஸ்து இயேசுவை நோக்கி ஓட்டத்தைத் தொடங்கிய நாம் எங்களுடைய முடிவு ஓட்டத்தை ஓட முடிக்கும் வரை கர்த்தர் எங்களுக்கு உதவி செய்வார். கர்த்தர் எங்களைப் பாதுகாப்பார், எங்கள் பிள்ளைகளைப் பாதுகாப்பார், எங்களைப் போஷிப்பார். ஏனென்றால் அவர் தான் சொல்லியிருக்கின்றார்: நான் உன்னை வாலாக்காமல் தலையாக்குவேன். கீழாக்கமல் மேலாக்குவேன். நிச்சயம் கர்த்தர் எங்கள் வாழ்க்கையிலே இந்த நாட்களில் விசுவாசத்தைக் கண்டு அற்புதங்கள் செய்வாராக. இன்றைக்கு ஊழியர்களைப் பார்த்து சொல்லுகின்றேன்: உங்களுக்கு கொடுக்கப்பட்ட கிருபை வரங்களைக் குறித்து மூப்பர் சங்கத்தினர் உங்கள் தலைகள் மேல் தங்கள் கரங்களை வைத்து ஜெபித்த வேளையிலே உங்களுக்கு உண்டான கிருபை வரங்களைக் குறித்து அசதியாயிராதீர் கள். உங்களுக்குள்ளே இருக்கிற வல்லமைகளைத் தேசம் இந்த நாட்களிலே கண்டு கொள்ளும் படியாய் கர்த்தர் விரும்புகின்றார். அதனை விசுவாசத்தோடு கூட பயன்படுத்துங்கள்.**

கர்த்தர் உங்களைக் கொண்டு பெரிய காரியத்தை இந்த தேசத்திலே செய்வார். அதை நீங்கள் உங்களுடைய அவிசுவாசத்தினாலே அசதி யாக்கி விடாதீர்கள். ஆவியை அவித்துப் போடாதீர்கள். கர்த்தர் உங்களைக் கொண்டு செய்கின்ற காரியம் எந்த ஜனத்தாரும் செய்திராத பெரிய காரியங்களாக இருக்கும். நம்முடைய வாழ்க்கையிலே விசுவாசம் வளர வேண்டும். **வாலிப சகோதரா, சகோதரி எதிர்காலத்தைக் குறித்து கவலைப் படாதே!. நீ ஜெபி ஆண்டவர் உனக்கான விலா எலும்பை சரியாகக் கொண்டு வந்து இணைப்பார்.** இன்றைக்கு நீங்கள் அவசரப்பட்டு, என்னுடைய அம்மா, அப்பா என்னைக் குறித்த கரிசனையற்ற வர்கள் என்று என்று சொல்லி உங்களுடைய வாழ்க்கைத் துணை யை நீங்களாவே தேடிக் கொள்ள முற்பட வேண்டாம். அப்படி செய்வீர்க ளாக இருந்தால் நீங்கள் விழுந்து போய் கவலைப்பட வேண்டி ஏற்படும். இன்றைக்கு அனேக வாலிப பிள்ளைகள் பஸ்தரிப்பு நிலையங்களிலும், தனியார் கல்வி நிறுவனங்களுக்கு முன்பாகவும் தங்களுடைய வாலிப எலும்புகளைத் தேடித் திரிகின்றார்கள்.

இந்த நிலை இன்றைக்கு ஆண்கள் மத்தியில் மாத்திரமல்ல அனேக வாலிப பெண்கள் மத்தியிலும் காணப்படுகின்றது. உனக்கான விலா எழும்பைத் தேவன் கொடுப்பார். ஆண்டவருடைய வேளை வருமட்டாக காத்திருங்கள். இந்த எதிர்காலத்தைக் குறித்த விசுவாசத்திலே நீ தளர்ந்து போய் இரட்சிப்பின் அனுபவத்தை நீ மறந்து அந்நிய காரியங்களில்நீஈடுபட்டாயானால்உன்வாழ்க்கை சாபமாய் மாறும் என்பதனை நீ மறந்து விடாதே. அதனை இயேசு கிறிஸ்து வருகின்ற போது பார்த்துக் கொள்வோம். அதற்கு முன்பாக என் வாழ்க்கையை நான் பார்த்துக் கொள்ள வேண்டும் என்கின்ற ஒரு ஆதிக்கம் உன் வாழ்க் கையில் வந்தால் அது உன்னுடைய

வீழ்ச்சிக்கு உதாரணமாய் அமைந்து விடும். **வேலையை ஆரம்பித்தவர் அந்த வேலைக்கு வேண்டிய பணத்தையும் கொடுப்பார். ஊழியத்தை ஆரம்பித்தவர் ஊழியத்திற்கு வேண்டிய ஆசீர்வாதத்தையும் கொடுப்பார். தரிசனத்தைக்கொடுத்தவர் தரிசனத்தை நிறைவேற்றுவார். இந்த விசுவாசம். நமக்குள்ளே இருக்க வேண்டியது அவசியமாகின்றது.**

இவன் விசுவாசத்தோடு கூப்பிட்டான். நீங்கள் எதனைக் கேட்கின்றீர்களோ? அதனை இயேசு கிறிஸ்துவிடம் விசுவாசத்தோடு கேளுங்கள். என் தேவன் என்னோடு கூட இருக்கின்றார். என்பதனை விசுவாசியுங்கள். பர்த்திமேயுவுக்கு சுகம் கொடுத்தவர் உங்களுக்கும் சுகம் கொடுப்பார். உங்களுக்கும் விடுதலை தருவார். உங்களுக்கும் நிம்மதி தருவார். உங்களுக்கு முதலாவது விசுவாசம் இருக்க வேண்டும்.

இன்று அனேகருக்கு ஜெபிக்கும் படியாக சென்று முழந்தால் படியிடுகின்ற போது தான் அடுப்பில் வைத்த கறி ஞாபகத்திற்கு வரும். முன் வீட்டுக்காரர் சாவி கொடுத்து விட்டு சென்றார்கள். அவர்கள் வருவார்களா? வரமாட்டார்களா? நாளைய தினத்தைக் குறித்த எண்ணங்கள் வந்து ஜெபத்திலே நாம் ஒரு மனப்படமுடியாதபடிக்கு எமக்கு பாடமாய் இருக்கின்ற சில வார்த்தைகளைக் கூறி ஆண்டவரே நீர் நல்லவர், வல்லவர், போதுமானவர் என்று சொல்லி துதியை முடித்து பின்னர் விசுவாச அறிக்கையை சொல்லி அந்த இடத்தை விட்டு கடந்து சென்று விடுவோம். ஆனால் ஆண்டவர் எங்களிடத்தில் எதிர்பார்ப்பது, என் மகன், என் மகள் என்னோடு ஒரு மனப்பட்டு என்னோடு அதிக நேரம் பேசவேண்டும். நானும் அவர்களோடு பேசவேண்டும். இதனையே ஆண்டவர் விரும்புகின்றார்.

**நீங்கள் முழந்தால் படியிட்டவுடனே உங்களுக்கு வரவேண்டிய எண்ணம்: என் தேவன் அருகில் இருக்கின்றார் என்கிறதான விசுவாசம வரவேண்டும். எனக்காய் கல்வாரி சிலுவையில் இரத்தம் சிந்தின என் அருமை இரட்சகர் என்னோடு கூட இருக்கின்றார். நாங்கள் செய்த பாவங்களின் நிமித்தமாய் அவர் அடிக்கப்பட்டார். அவர் தண்டிக்கப்பட்டார். அவர் ஒரு போதும் எங்களைக் கைவிடமாட்டார். என்கின்ற விசுவாசம் இருக்க வேண்டும்.**

## 02. அவருடைய நாமத்தைச் சொல்லி கூப்பிட வேண்டும்

**மாற்கு 10:47[B] இயேசுவே, தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும் என்று கூப்பிடத் தொடங்கினான்.** நாங்கள் அவருடைய நாமத்தைச் சொல்லிக் கூப்பிட வேண்டும். **அவருக்கு ஆயிரம் நாமங்கள் பழைய ஏற்பாட்டில் உண்டு. புதிய ஏற்பாட்டில் இம்மானுவேல் என்று வைக்கப்பட்டது.**

**இந்த நாட்களிலே பரிசுத்த ஆவியான வராய் நம்முடைய வாழ்க்கையிலே இருக்கின்றார்.** இன்றைகஞ முக்கோடி தேவர்கள் உலகில் இருக்கின்றார் கள். அவர்கள் ஒவ்வொரு தேவர்க ளையும் ஒவ்வொரு விக்கிரகங்களின் பெயரைச் சொல்லி அழைக்கின்றார் கள். **நமக்கு இருக்கின்றது ஒரே யொரு தேவன். அந்த தேவனுக்கு பல நாமங்கள் உண்டு. ஒடு சிறிய இடந்தை தன்றுடைய தகப்பிரைடந் ஏதாவது ஒன்றைக் கேட்குந் போது அப்பா எனக்கு அதனை (சொக்கலட்) வாங்கித் தாருங்கள் என்று கேட்குந். அவர் அதற்கு செவி சாய்க்காதவர் போல இடுக்குந் போது என் செல்ல அப்பாதானே தயவு எனக்கு அதனை வாங்கித் தாருங்கள் என்று கெஞ்சிக் கேட்குந், கொஞ்சிக் கேட்குந். உடனே தகப்பனார் மனந்மாறி அந்தப் பிள்ளையி னுடைய பாசத்திற்கு அடிபணிந்து அவடுடைய இடுதயந் உருகி பிள்ளை கேட்டதைப் பார்க்கிலுந் இகவுந் பெரிதான சொக்கலட்டை பிள்ளைக்கு வாங்கிக் கொடுப்பார். பத்து ரூபாய்க்கு அந்தப் பிள்ளை சொக்கலேட்டை வாங்கித்தருந்படி கேட்குந் போது தந்தை ஆயிரந் ரூபாய் பெறுமதியான சொக்கலட்டை வாங்கிக் கொடுப்பார்.**

அதே போலத் தான் நாம் நம்முடைய அப்பாவின் நாமத்தைச் சொல்லிக் கூப்பிட வேண்டும். நம்மு டைய உற்ற நண்பராய் இருக்கின்ற அவருடைய நாமத்தைச் சொல்லிக் கூப்பிட வேண்டும். நம்முடைய தேற்ற வாளனாகிய அவருடைய நாமத் தைச் சொல்லிக் கூப்பிட வேண்டும். நம் தேவன் நம்மோடு கூட இருக் கின்றார். ஜீவனுள்ள தேவன் நம்மோடு கூட இருக்கின்றார். எனவே பிரியமானவர்களே, இயேசுவின் நாமங்க ளைச் சொல்லி அவரைக கூப்பிட வேண்டும். அவரைப் புகழ்ந்து பாடி ஆராதித்து அவரிலே அன்பு கூரும் போது ஆண்டவர் நமக்கு நன்மை செய்வார்.



சில ஜெபங்களை நீங்கள் செய்கின்ற போது அந்த ஜெபங்க ளுக்கு பதில் வராது. தானியேலுடைய வாழ்க்கையிலே தானியேல் ஜெபித் தான். ஆனால் அதன் பதில் எத்தனை நாட்கள் கடந்து வந்தது? 21 நாட்கள் கடந்து அந்த ஜெப விண்ணப்பத்திற்கு பதில் வந்தது. நான் உங்களுக்கு ஒன்றைச் சொல்ல விரும்புகின்றேன். இன்றைக்கு நீங்கள் ஜெபிக்கும் போது நீங்கள் அந்தகார லோகாதிபதி களின் ஆவிகளை, ஜெபத்திற்கு பதிலைக் கொண்டுவர முடியாதடிபடி இருக்கின்ற தடைகளை கடிந்து ஜெபம் செய்ய வேண்டும். ஏனென்றால் தானியேலுக்காக காபிரியேல் தூதன் பதிலைக் கொண்டு வரும் போது அந்தகார லோகாதிபதிகளின் ஆவிக ளால் அந்த பதில் தடை செய்யப்படு கின்றது.

**"நன்றி"**

**தொடரும்...**

**தேவன் தாமே உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக !**

**போதகர் செலி மார்ஷ்,**

**கொழும்பு.**



# குறுக்கெழுத்துப்போட்டி – 45



| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ■ | 1 | 2 | 3 | | | ■ |
| | | | 4 | ■ | | 8 |
| | ■ | 5 | | | | ■ |
| 7 | | | | ■ | 6 | 9 |
| | | | ■ | 10 | ■ | |
| 12 | | ■ | | | 11 | ■ |

குறிப்பு:- 12வயதுக்கு மேற்பட்டவர்களே தயவு செய்து குறுக்கெழுத்துப் போட்டியையும், வினா விடையையும் செய்து அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம். - நன்றி

## இடமிருந்து வலமாக

1. மரியாளுடன் பேசிய தேவதூதன்
5. ரூத் எந்த ஸ்திரி
7. மோசே மிகுந்த சாந்த குணமுள்ளவன்: கர்த்தர்............ உண்மைத்துவத்தையும் கண்டார்
12. அளவோடு இதைச் சாப்பிட வேண்டும்



## வலமிருந்து இடமாக

4. இதிலே கை வைத்தால் திரும்பிப் பார்க்கக் கூடாது.
8. இது உற்சாகமுடையது தான்
9. ..............மான துணிக்கைகளை 7கூடை நிறைய எடுத்தார்கள்
11. அப்போஸ்தலனாகிய பவுலை கைதியாக ரோமாபுரிக்கு கொண்டு சென்ற போது பல பாடுகள் மத்தியில் இதை அடைந்தனர்.

## மேலிருந்து கீழாக

2. ஒநேசிமுவை ஏற்றுக் கொள்ளும்படி பவுல் மன்றாடினான். இதை எப்புத்தகத்தில் காணலாம்.
3. இயேசுவை இந்த மலையில் சிலுவையில் அறைந்தார்கள் (குழம்பியுள்ளது)
9. இப்படி ஒரு வாசல் வேதாகமத்தில் உண்டு
10. சமாரிய ஸ்திரி அனேக சமாரியரை இயேசுவிடம் கொண்டு வந்தாள். அனேகரைக் கொண்டு வந்ததை இப்படிச் சொல்ல முடியும்.

## கீழிருந்து மேலாக

6. கர்த்தருடைய .......... எப்போதும் தங்கியிருக்க வேண்டும்
7. இதையும் நாம் கூட்டி வழங்க வேண்டுமென வேதம் சொல்கிறது
12. இந்த அன்பைத் தேவன் நம்மேல் ஊற்றியிருக்கிறார்

# குறுக்கெழுத்துப் போட்டி – 44
## சரியான பதில்கள்

*இடமிருந்து வலமாக*

01. அனைவருக்கும்
04. சருவ
06. மாவு

*மேலிருந்து கீழாக*

02. லாசரு
03. குள்ளமானவன்

*வலமிருந்து இடமாக*

05. வருசம்
06. மாலை
07. அவமானம்

*கீழிருந்து மேலாக*

08. ஆயுதம்
09. அம்பு

# வினாவிடை – 45 46
## சரியான பதில்கள்

01. பென்யமீன் புத்திரம் (நியாயாதிபதிகள் 21:20-23)
02. சவுல் (1சாமுவேல் 10:22-24)
03. யோவாஸ் (2நாளாகமம் 22:10-12)
04. யோசேப்பு (ஆதியாகமம் 41:49)
05. சாலொமோன் (1இராஜாக்கள் 4:29)
06. ஏசா (மல்கியா 1:3)
07. நெகேமியா (நெகேமியா 2:13)
08. அப்போஸ்தலனாகிய யோவான் (வெளி. 12:3)
09. சங்கீதம் 74:13
10. சேபூல் (நியாயாதிபதிகள் 9:36)

## சந்தா விபரம்

இச் சஞ்சிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள் உங்களது பெயரையும் விலாசத்தையும் தெளிவாக எழுதி சந்தாப்பணத்துடன் ஆசிரியருக்கு அனுப்பினால் சந்தாதாரர்களாகச் சேர்க்கப்படுவீர்கள்.

## சந்தா விபரம் (தபால் செலவு உட்பட)

| | |
|---|---|
| இலங்கை | S.L Rs 130.00 Per Year |
| இந்தியா | S.L Rs 250.00 Per Year |
| கனடா, அமெரிக்கா | S.L Rs 400.00 Per Year |
| மற்றைய எல்லா நாடுகளும் | S.L Rs 350.00 Per Year |

(காசோலை, காசுக்கட்டளை "சீயோன் தேவாலயம்" / "ZION CHURCH" என எழுதப்பட வேண்டும்)

**சந்தாதாரராக விரும்பின் கூப்பனை தயார் செய்து அனுப்பவும்**

### சந்தா கூப்பன்

பெயர் :-..........................................................

விலாசம் :-..........................................................

..........................................................

..........................................................

..........................................................

தயவு செய்து சந்தா பணத்தையும் சேர்த்து அனுப்பவும்.

Zion Church Office,
No. 347, Navalar Road,
Jaffna, Srilanka.

To:........................................................................
........................................................................
........................................................................
........................................................................
........................................................................